

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து : தேசிய தலைவர்கள்: தேசிய தலைவர்கள் அநேக அப்பாவி மக்களை பாதிப்புள்ளாக்கும் ஆயத வர்த்தகத்தை முடிவுக்கு கொண்டு வர உறுதியுடன் தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று**

**ஜூன் மாத கரு : ஒன்றிணைக்கும் ஆவி**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜூன் 18 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்த பெருவிழா<br>கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்த பெருவிழா தொடர்ந்து ஆராதனை |
| ஜூன் 22 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | புனித பவுலீனு நோலா, புனிதர்கள் ஜோன் பிசர், தாமஸ் மூர் |
| ஜூன் 23 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | இயேசுவின் திருஇருதயம் |
| ஜூன் 24 சனி | காலை 6.30<br>காலை11.00 | திருப்பலி (ஆ)<br>சடங்கு (த) | திருமுழுக்கு யோவானின் பிறப்பு<br>எவெலினோ செபஸ்டியன் அற்புத ராஜூ& யுவனேஸ்வரி அர்ஜூனன் |
| ஜூன் 25 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>காலை11.00<br>மாலை 5.30 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ம)<br>நவநாள்/ திருப்பலி (த) | பொதுக்காலம் 12ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 12ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 12ஆம் ஞாயிறு<br>கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| ஜூன் 18 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| ஜூன் 20 செவ் | காலை 8.30<br>மாலை 7.45<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>பெர். மை 1-3<br>முனிசிபல் | பங்கு பரிந்துரை குழு<br>நற்கருணை பணியாளர்கள் கூட்டம்<br>அருங்கொடை (த) |
| ஜூன் 21 புதன் | மாலை 8.00<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 1-1 | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த)<br>அருங்கொடை (த) |
| ஜூன் 22 வியா | மாலை 7.00<br>மாலை 7.30<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 2-2<br>பெர். மை 1-3 | முன்னோன் வாசகர் பயிற்சி<br>RCIA- புதிய வகுப்பு<br>புலூமா மகளிர் குழு கூட்டம் |
| ஜூன் 23 வெள் | மாலை 7.30<br>மாலை 8.00<br>மாலை 8.00 | ஆலயம்<br>ஜெலாப்பாங்<br>புந்தோங் தீகா | பாடல்குழு (ஆ)<br>அருங்கொடை (த)<br>இரக்கமிகு ஆண்டவர் செபம் |
| ஜூன் 24 சனி | காலை 10.00<br>மாலை 5.30 | பெர். மை 2-5<br>ஆலயம் | சீடத்துவ நிகழ்வு<br>செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஜூன் 25 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00<br>மாலை 7.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம்<br>புந்தோங் தீகா | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த)<br>கிறிஸ்து அரசர் சிற்றாலய செயற்குழு கூட்டம்-வருகை கட்டாயம் |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. நன்றி:** வருகின்ற MCCSD 2 நிகழ்வின் மீது நீங்கள் உண்மையிலேயே மிகவும் தாராளமாக இருந்தீர்கள். உங்களது ரொக்கம் மற்றும் பொருள் நன்கொடைக்கு நன்றி. இந்த நிகழ்வு 23 ~ 27 ஜூன் 2017 வரை நடைபெறும். MCCSD 2 நிகழ்வில் ஏறக்குறைய 1,300 இளைஞர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இருப்பார்கள். உங்களது செபத்தில் அவர்களையும் வைத்துக்கொள்ளுங்கள்.

**2. ஊதாரி மகன் ஒடுக்கம் தமிழில்:** இந்த ஒடுக்கம் 18 ~ 20 ஜூலை 2017 (செவ், புதன் & வியா) @ மாலை 8.00 ~ 10.00வரை பெர். மையத்தில் நடைபெறும். தயவு செய்து உங்களது பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும்.

**3. ஊதாரி மகன் ஒடுக்கம் ஆங்கிலத்தில்:** இந்த ஒடுக்கம் 31 ஜூலை ~ 2 ஆக 2017 (திங், செவ் & புதன்) @ மாலை 8.00 ~ 10.00வரை பெர். மையத்தில் நடைபெறும். தயவு செய்து உங்களது பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும்.

**4. பெற்றோர்களுக்கான அமர்வு பற்றிய சொற்பொழிவு - டாக். கதீர் இப்ரகீம்:** நாள்: 21 ஜூலை 2017 (வெள்) நேரம்: மாலை 8.00 ~ 10.00வரை பெர். மையத்தில் நடைபெறும்.

**5. தவக்காலம் 2017:** இந்த வருடம் வசூலான தொகை **ரிம 22,471.65**. உங்களது இரக்க குணம் மிகவும் பாராட்டுதற்குரியது. கடவுள் உங்கள் அனைவரின் தாராள குணத்தையும் மிகுதியாக ஆசீர்வதிப்பாராக.

**6. தனித்த மூத்த இளைஞர்கள்:** பினாங்கு மறைமாவட்ட ஆயர் மேதகு செபஸ்தியன் பிரான்சிஸ் அவருடன் ஓர் அதிகாரபூர்வமற்ற கேள்வி - பதில் சந்திப்பு "தேநீர் நேரத்திற்கு" தனித்த மூத்த இளைஞர்கள் (22-40 வயது) அழைக்கப்படுகிறார்கள். நாள்: 7/7/2017 (வெள்ளி) இரவு 8.00 ~ 10.00 வரை. இடம்: ஈப்போ, சிலிபின், புனித லூர்து அன்னை தேவாலயம். ஒருமைப்பாட்டு பங்காக ரிம 5/- வசூலிக்கப்படும். இடம் பதிவு செய்ய பிமஇக 04-2274851/ மெக்டலீன் 016-5314767 என்ற எண்களைத் தொடர்பு கொள்ளவும்.

**7. கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்த பெருவிழா:** 18 ஜூன் 2017 (ஞாயிறு) காலை 9.00 மணி திருப்பலிக்குப் பின்னர் ஆராதனைக்காக திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டிருக்கும். இந்த ஆராதனை மாலை 6.00க்கு தேவநற்கருணை ஆசீருடன் நிறைவுறும்.

**கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்த ஆராதனைக்கான அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| காலை 10.30 ~ காலை 11.00 | பமமேகு | மதியம் 2.30 ~ பிற்பகல் 3.00 | கிஅ சிற்றாலயம் |
| காலை 11.00 ~ காலை 11.30 | ஆன்மீகக் குழு | பிற்பகல் 3.00 ~ பிற்பகல் 3.30 | மேற்கு திசை |
| காலை 11.30 ~ மதியம் 12.00 | திருவழிபாட்டுக் குழு | பிற்பகல் 3.30 ~ பிற்பகல் 4.00 | தெற்கு திசை |
| மதியம் 12.00 ~ மதியம் 12.30 | முதியோர் மறைக்கல்வி | பிற்பகல் 4.00 ~ பிற்பகல் 4.30 | மத்திய திசை |
| மதியம் 12.30 ~ மதியம் 1.00 | சிறார் மறைக்கல்வி | பிற்பகல் 4.30 ~ மாலை 5.00 | கிழக்கு திசை |
| மதியம் 1.00 ~ மதியம் 1.30 | அ. வே சிற்றாலயம் | மாலை 5.00 ~ மாலை 5.30 | வடக்கு திசை |
| மதியம் 1.30 ~ மதியம் 2.00 | பு. செ சிற்றாலயம் | மாலை 5.30 ~ 6.00 | நற்கருணை பணியாளர்கள் குழு |
| மதியம் 2.00 ~ மதியம் 2.30 | புபிஅ சிற்றாலயம் | **மாலை 6.00** | **தேவநற்கருணை ஆசீர்வாதம்** |

**8. புகைப்படங்கள்:** பாஸ்கா திருவிழிப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை RCIA வேட்பாளர்கள் 18 ஜூன் 2017 (ஞாயிறு) காலை 9.00 மணி திருப்பலிக்கு பிறகு பங்கு மண்டபத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**9. அடுத்த குழந்தைகள் திருமுழுக்கு (தமிழ்):** 8 ஜூலை 2017 (சனி) @ மாலை 4.30க்கு நடைபெறும். மேல் விபரங்களுக்கு பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**10. மலேசியா கத்தோலிக்க முகாம் மாணவர்கள் தினம் நிறைவு திருப்பலி நேரலை:** பினாங்கு, பரிசுத்த ஆவி பேராலயத்தில் 27 ஜூன் 2017 (செவ்) காலை 10.00க்கு நேரலை செய்யப்படும். பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் கொண்டாட்டத்தை இணையத்தில் **http://www.youtube.com/user/liveonlinepenang** வழி காணலாம்.

**11. 2017 / 2018 முதியோர் திருமுழுக்கு - புதிய வகுப்பு (யோவான் 1:39) "வந்து பாருங்கள்" :** புதிய வகுப்புக்கு தங்கள் பெயர்களை பதிவு செய்து கொண்டவர்கள் ஒரு விளக்கக் கூட்டத்திற்கு வரக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். **நாள்**: 22 ஜூன் 2017 (வியா) **நேரம்**: மாலை 7.30 **இடம்**: பெர். மையம் 2-2 (2ஆம் மாடி) யாருக்கு முதியோர் திருமுழுக்கு? திருமுழுக்கு பெறாத பெரியவர்கள், மற்ற கத்தோலிக்க அல்லாத கிறிஸ்துவ பாரம்பரியத்தில் திருமுழுக்கு பெற்ற பெரியவர்கள். புது நன்மை, உறுதிபூசுதல் அருள்சாதனங்களைப் பெறாத கத்தோலிக்க பெரியவர்கள். இதுவரைக்கும் ஆன்மீக பயணத்தை தொடங்க 13 வேட்பாளர்கள் பதிவு செய்துள்ளனர். மேல் விபரங்களுக்கு பங்கு குருவானவர்கள்: தந். ரோபர்ட் டேனியல்/ தந். சைமன் ஆனந்த் (பங்கு அலுவலகம் 05-5279349)/ திரு.ஜேரோம் சாமுவேல்: 05-5268329/ 012-6786911

**12. அடக்க ஏற்பாடு:** அடுத்த 5 வருடங்களுக்கு தம்பூனில் உள்ள கத்தோலிக்க கல்லறையை புனித சகாய மாதா தேவாலயம் நிர்வாகம் செய்யும். நமது பங்கில் ஏதேனும் மரணம் ஏற்பட்டால் உடனடியாக திருப்பலிக்கான ஏற்பாட்டிற்கு புலூமா பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். அதன் பிறகு அடக்கத்திற்கான ஏற்பாட்டிற்கு நீங்கள் உடனடியாக புனித சகாய மாதா தேவாலயத்தை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மற்ற நேரங்களில் தோமஸ் ஜீ (012-5182818) தொடர்பு கொள்ளவும்.

**13. சிற்றாலய கட்டுமான திட்டங்கள்:** ஒவ்வொரு சிற்றாலயம் கட்டுவதற்கு (கிஅ/ அவே) உச்ச வரம்பாக ரிம 1.2 மில்லியன் என ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. அந்த திட்டம் அதனை விட மலிவாகவும் இருக்கக் கூடும். எவ்வாறாயினும், எந்த திட்டமும் 80% பணம் வங்கியில் இல்லாமல் தொடங்கப்பட முடியாது. இந்த வகையில் நமது ஒவ்வொரு சிற்றாலயம் கட்டும் பணியை தொடங்க நம்மிடம் குறைந்தது ரிம 960,000.00 இருக்க வேண்டும். இது பினாங்கு மறைமாவட்ட கொள்கை. "நீங்கள் திட்டத்தை தொடங்குங்கள், நாங்கள் பிறகு தருகிறோம்" என்ற பேச்சு தேவையில்லை. நம்மிடம் பணம் இருந்தால் நாம் கட்டுவோம், இல்லையேல் நம்மிடம் பணம் வந்து சேரும் வரை காத்திருப்போம்!!!

**14. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி மே 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **322,189.03** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **333,341.43** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

**11/06/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,209.50 **காலை 9.00** - RM 1,361.80 **தாசேக்** - RM 147.40 **மொத்தம்**– RM 2,718.70 **2017** - RM 170.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்